26th July 1957]

THE HON. SRI M. A. MANICKAVELU : ஜமீந்தார் காலத்திலே பட்டா எப்படி எப்படியோ கொடுத்திருக்கலாம். ஆனல், எஸ்டேட் அபாலிஷன் சட்டத்தின் விதிகளின்படி யாருக்குப் பட்டா கொடுக்கவேண்டுமோ அவருக்கு கொடுத்து, யாருக்குக் கொடுக்கக் கூடாதோ அவர்களுடைய பட்டாவை ரத்து செய்து, அதற்கான காரியங்களை சிப்பந்திகள் செய்துவருகிருர்கள்.

SRI K. SATTANATA KARAYALAR : கீழ் நிலத்திலே—குளத்திலே சாகுபடி செய்வதற்கும் கரைக்கப்பால் உள்ள—நிலத்திலே சாகுபடி செய்வதற்கும் அடிப்படையான வித்தியாசம் இருக்கிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா? தண்ணீர் உயர உயர கதிரும் உயர்ந்துகொண்டே வரும். அதிலே தோணியிட்டு அறுப்பார்கள் சில இடங்களிலே. அப்படி உள்ள இடங்களிலாவது அனுமதிக்கப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இங்கே அப்படி இருக்கிறதாகத் தெரியவில்லை.

MR. SPEAKER : ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். ஒரு கனம் அங்கத்தினரின் கேள்விக்கு பதிலளிக்கும்போது கனம் அமைச்சர் அவர்கள், பதில் சேகரிக்கப்பட்டு வருவதாகச் சொன்னர்கள். அந்தக் கேள்வியை மறுபடியும் புதிதாகப் போடவேண்டுமா என்று அந்த கனம் அங்கத்தினர் அப்போது கேட்டார். அப்போது, புதிதாகக் கேள்வி போடவேண்டும் என்று நான் சொன்னேன். நான் அப்படிச் சொன்னது தவறு, புதிதாகச் கேள்வி போடவேண்டாம். ஏனென்றல், **In the summary of recommendations accepted by the Assurances Committee, there is a standard list of forms constituting assurances as approved by the committee. Item 20 reads " Efforts are being made to collect the necessary data."** அந்த "டேடா" வந்த பிறகு, அந்தக் கேள்வியைப் புதுப்பிக்காமல்[a] இருந்தாலும் பதில் சபை முன்பு வைக்கப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன். 9–40 a.m.

Protected water-supply to Rasipuram.

* 267 *Q.*—SRI M. P. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there is any scheme before the Government to provide protected water-supply to Rasipuram Municipality from Cauveri river at Mohanur in Salem district ; and

(*b*) if so, the present stage of the scheme ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) The Government have sanctioned the investigation of a water-supply scheme for the Rasipuram Municipality, with Cauveri river as the source.

(*b*) The Investigation report is awaited from tbe Chief Engineer, P.W.D. (General).

SRI M. P. SUBRAMAIAM : சேலம் மாவட்டத்திலுள்ள ராசிபுரத்தில் ஒவ்வொரு ஆண்டிலும் தண்ணீர் பஞ்சம் வருகிறது என்பது அரசாங்கத்தாருக்குத் தெரியுமா ? அங்கே 70—90—100 அடி ஆழமுள்ள கிணறுகள்தான் இருக்கின்றன. அங்கே தண்ணீரில்லாத சித்திரை, வைகாசி மாதங்களில் தண்ணீர் குடம் ஒன்று ஒன்றரை அணு, இரண்டு அணு வீதம் விற்கப்படுகிறது. ஆகவே அங்கே தண்ணீர் வசதிக்கான திட்டத்திற்கு முதலிடம் (பர்ஸ்ட் ப்ரையாரிடி) கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ராசிபுரத்தில் குடிதண்ணீர் வசதி அவசியம் செய்துகொடுக்கப்படவேண்டும் என்ற காரணத்தினல்தான் அங்கே " இன்வெஸ்டிகேஷன் " செய்வதற்கு உத்தரவு போடப்பட்டது.

---

a Vide Speaker's remarks on page 460 supra.

[26th July 1957

ஆனால் நகரக் குடிதண்ணீர் வசதிக்கான பணத்தை ரூ. 170 லட்சம் திட்டக் கமிஷன் குறைத்திருக்கிறது. நமக்கு 865 லட்சம் ரூபாய் தேவை. ஆகையால், இந்த 865 லட்சம் ரூபாயையும் கொடுக்கவேண்டுமென்று திட்டக் கமிஷனுக்கு எழுதியிருக்கிறோம். அந்தப் பணம் நமக்குக் கிடைத்தால் இந்தக் காரியங்களையெல்லாம் நாம் சுலபமாகச் செய்யலாம். இல்லாவிட்டால் " ப்ரையாரிட்டி "-ப் பிரகாரம் எடுத்துக்கொள்ள வேண்டியதுதான்.

Ex-tappers

***268 Q.—Sri M. S. Selvarajan : Will the Hon. the Minister for Home be pleased to state—**

(a) the number of tappers who were in the State, districtwar before the introduction of Prohibition throughout the State ; and

(b) the steps taken for the rehabilitation of the ex-tappers in Tirunelveli district ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (a) and (b) The answer is placed on the table[a] of the House.

Sri M. S. SELVARAJAN : மதுவிலக்கு இலாகாவின் பொறுப்பில் இருந்த முந்தைய அமைச்சர் அவர்கள் அப்போது, திருநெல்வேலி ஜில்லாவில் சில இடங்களில், குறிப்பாக நாங்குனேறி, திருச்செந்தூர் தாலுகாக்களில், " எக்ஸ் டாப்பர்ஸ் "-க்காக தீப்பெட்டித் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்—குறிப்பாக திருச்செந்தூர் தாலுகாவில் ஒரு இடத்தில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்—என்று ஒரு தகவல் கொடுத்தார்கள். ஆனால் அப்படி ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அந்த யோசனை என்னவாயிற்று ? அதை கனம் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : தீப்பெட்டித் தொழிற்சாலையை அமைப்பதுபற்றி பரிசீலனை செய்யப்பட்டது. பிறகு அதை நிறைவேற்றுவதற்கில்லை என்று அறிந்து அது கைவிடப்பட்டது.

Sri S. B. ADITYAN : அச்சிட்டு மேஜை மீது வைக்கப்பட்டுள்ள பதிலில், திருநெல்வேலி ஜில்லாவில் 398 பனைவெல்ல உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பதனீர் அல்லது நீரா இறக்குகிறவர்களுக்கு லைசென்ஸ் கொடுக்க ஏற்பாடு செய்வது தவிர வேறு உருப்படியான வேலை எதையும் இச்சங்கங்கள் செய்யவில்லை. ஆகையால், பனைவெல்ல உற்பத்தி ஸொஸைடிகளை அரசாங்கம் ரத்து செய்யுமா ? அல்லது, இந்த ஸொஸைடிகளில் மெம்பர்களாக இருந்தால் தான் லைசென்ஸ் உண்டு என்ற நிர்ப்பந்தம் இல்லாமல் எல்லோருக்கும் பதனீர் அல்லது நீரா இறக்குவதற்கு அரசாங்கம் லைசென்ஸ் கொடுக்குமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : நீரா இறக்குவது என்று வெல்லம் உற்பத்தி செய்வது வேறு விஷயம். வெல்லம் உற்பத்தி செய்வதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் வேலைகள் பற்றி கூடியவரையில் கவனிக்கப்பட்டு வருகிறது.

Sri P. G. MANICKAM : திருநெல்வேலி ஜில்லாவில் பனை ஓலையிலிருந்து பல பொருள்களைத் தயாரிக்கும் தொழிலை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டிருக்கும் நிலையத்திலிருந்து 500 குடும்பங்களுக்கு அந்தத் தொழிலைச் செய்வதற்கான கருவிகள் இலவசமாக அளிக்கப்படும் என்று பதிலிலிருந்து தெரிகிறது. கோயம்புத்தூர் ஜில்லாவில் மாஜி மரமேறிகள் அதிகமாக இருப்பதால், அந்த ஜில்லாவில் அவர்களுக்கு இந்தத் தொழிலில் பயிற்சி கொடுப்பதற்கு அரசாங்கத்தார் நடவடிக்கை எடுப்பார்களா ?

---

[a] **Printed as Appendix II on pages 536–537 infra.**